அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 130/2016
தேதி 15.08.2016

**சமத்துவ மக்கள் கட்சியின் சுதந்திரதின விழா கொண்டாட்டம்**
**சமக நிறுவனத் தலைவர் புரட்சி திலகம் அவர்கள்**
**கொடியேற்றி இனிப்பு வழங்கினார்**

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் 70 வது சுதந்திரதினவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காலை 9 மணியளவில் கட்சியின் நிறுவனத் தலைவர் புரட்சி திலகம் ஆர்.சரத்குமார் அவர்கள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் தேசியக் கொடியை ஏற்றி தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கினார்.

அதையடுத்து கட்சியின் தலைமை அலுவலகத்தில் உள்ள மகாகவி பாரதியார் அரங்கத்தில் இந்திய தேசத்தின் வளர்ச்சி – இளைஞர்களின் பங்கு வெற்றி பாதையா? அல்லது வெறும் கனவா? என்ற தலைப்பின் கீழ் சிறப்பு பேச்சுப் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் மாநில பொருளாளர் ஏ.என்.சுந்தரேசன், இளைஞரணி & மாணவரணி செயலாளர் சி.வி.சாமுவேல் மேத்யூ, சென்னை மண்டல செயலாளர் எம்.ஏ.சேவியர், மாநில மகளிரணி துணைச் செயலாளர் எம்.பாகீரதி, கலை இலக்கிய அணி துணைச் செயலாளர் ராஜேந்திரன் இளைஞரணி துணைச் செயலாளர் டி.மகாலிங்கம் மற்றும் சென்னை மண்டலத்திற்குட்பட்ட அனைத்து மாவட்டச் செயலாளர்கள், பகுதி, தொகுதி நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc
தலைவர்

**இத்துடன் படம் இணைக்கப்பட்டுள்ளது**